சிற்றேட்டுத் தொடர்
இல. 1

# விலை உறுதிப்பாடு



விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் இலங்கை மத்திய வங்கியின் இரண்டு மையக் குறிக்கோள்களில் ஒன்றாகும். விலை உறுதிப்பாடு என்பதால் கருதப்படுவது என்ன, அது எவ்வாறு அளவிடப்படுகின்றது, அது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது, மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பாதிக்கும் காரணிகள் என்பவை பற்றி இச் சிற்றேடு விளக்குகின்றது. அத்துடன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளையும் விலை உறுதிப்பாட்டை எய்திப் பேணுவதற்கு பணக் கொள்கை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பன பற்றியும் இச் சிற்றேடு விபரிக்கின்றது. இச்சிற்றேட்டின் நோக்கம் விலை உறுதிப்பாட்டை எய்துவதில் இலங்கை மத்திய வங்கியின் பங்களிப்பு பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் அதிகரிக்கச் செய்வதாகும்.

இலங்கை மத்திய வங்கி

ஒக்டோபர் 2005

## விலை உறுதிப்பாடு என்றால் என்ன?

விலை உறுதிப்பாடு என்பது, நுகர்வோர் பண்டங்களின் பொதுவான விலைமட்டம் மாறாமல் இருக்கின்ற அல்லது மாறுகின்ற தன்மையைக் குறிக்கின்றது. பொருளாதாரமொன்றில், பங்குபற்றுகின்றவர்களான குடும்பத்தவர்கள் மற்றும் தாபனங்களின் பொருளாதாரத் தீர்மானங்களில் ஏதேனும் குறிப்பிடத்தக்க செல்வாக்குச் செலுத்துவதற்கு அது போதியளவு உறுதியற்ற, குறைவான வீதத்தில் நிகழ்கின்ற ஒரு சூழ்நிலையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருளியல் வார்த்தைப் பிரயோகமே விலை உறுதிப்பாடாகும். நாம் நுகர்வு, முதலீடு, உற்பத்தி அல்லது வியாபாரத்தில் ஈடுபடுகின்றபோது எமது நாளாந்தச் செயற்பாடுகளில் நுகர்வோர்களாக அல்லது விற்பனையாளர்களாக வேறுபட்ட வடிவங்களில் விலைகளைக் காண்கின்றோம். சந்தைப் பொருளாதாரம் ஒன்றில், விலை மாற்றங்கள் பண்டங்கள் மற்றும் சேவைகளின் கேள்வி, நிரம்பல் என்பவற்றில் தங்கியுள்ள ஒரு பொதுவான தோற்றப்பாடாகும். விலைகள் இரு திசைகளிலும் பல்வேறு அளவுகளில் மாற்றமடைவதால், தனிப்பட்ட விலை மாற்றங்களை வெவ்வேறாக ஆராய்வதன் மூலம் விலைகளில் ஏற்படும் பொதுவான அசைவைக் கணித்தல் கடினமாகும். எனவே, தனிப்பட்ட விலை அசைவுகளின் மொத்தத் தாக்கத்தைக் காட்டுவதற்கு பொதுவிலை மட்டம் எனப்படும் ஒரு பொருளியல் எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக, விலை உறுதிப்பாடு என்பதன் பொருள் பொருளாதாரமொன்றின் பொது விலை மட்டத்தில் ஒரு சார்பு உறுதிப்பாடு என்பதாகும். ஆனால், அது தனிப்பட்ட விலைகளின் அல்லது நிலையான விலைகளின் உறுதிப்பாட்டைக் குறிப்பதில்லை. ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேவ் சிஸ்டம்' இன் தலைவர் அலன் கிறீன்ஸ்பான் என்பவரின் கூற்றில் இது மிகப் பொருத்தமாக விபரிக்கப்பட்டுள்ளது: "எல்லா நடைமுறை நோக்கங்களுக்கும், விலை உறுதிப்பாடு என்பதன் பொருள், சராசரி விலை மட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் கணிசமான அளவு தொழில்கள் மற்றம் குடும்பத்தவர்களின் தீர்மானங்களில் ஊடுருவ முடியாத அளவு சிறியவை ஆக இருப்பதோடு படிப்படியாகவும் மாற்றடைமடைகின்றன."[1]

1/1989 ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில்

## விலை உறுதிப்பாடு எவ்வாறு அளவிடப்படுகின்றது?

குறிப்பிட்ட பண்டங்கள் அல்லது சேவைகளின் விலை அதிகரிப்பை (அல்லது குறைவை) விட பொதுவான விலைகளின் அதிகரிப்பில் (அல்லது குறைவில்) நாம் கூடுதலாக அக்கறையோடு இருப்பதால், பொது விலை மட்டத்தின் மாற்றங்களைக் காட்டுகின்ற ஒரு அளவீட்டைக் கண்டுபிடித்தல் அவசியமாகும். பொதுவிலை மட்டம் விலைச்சுட்டெண் எனப்படும் புள்ளி விபரக் கருவியினால் அளவிடப்படுகின்றது. இலகுவாகக் கூறுவதாயின், ஒரு விலைச்சுட்டெண் என்பது, தெரிவு செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள் அடங்கிய கூடையொன்றில் உள்ள விலைகளின் நிறையிடப்பட்ட சராசரி ஆகும். இங்கு நிறைகள் கூடையின் மொத்தப் பெறுமானத்தில் அதன் சார்புப் பங்கு பிரதிபலிப்பதைப் போன்று ஒவ்வொரு பொருளின் சார்பு முக்கியத்துவத்தையும் நிறைகள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. பல்வேறு விலைச் சுட்டெண்கள் உள்ளன. உ-ம் நுகர்வோர் விலைச்சுட்டெண்கள், மொத்த விற்பனை விலைச்சுட்டெண்கள், மற்றும் உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்கள் என்பன. இவை உற்பத்தி முதல் இறுதி நுகர்வு வரையிலான நடவடிக்கை முறையின் பல்வேறு நிலைகளில் விலை அசைவுகளின் ஒட்டு மொத்தப் போக்கை அளவிடுகின்றன. எனினும், நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் மாற்றங்கள் சமூகம் ஒன்றில் உள்ள மக்கள் நுகர்வோர்களாக எதிர்நோக்குகின்ற விலை அசைவுகளைக் குறிப்பதால், அவை மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற விலைச் சுட்டெண்களாகும். ஆயினும், மொத்த விற்பனை விலைச்சுட்டெண்கள், உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்கள் என்பனவற்றின் அசைவுகள் நுகர்வோர் விலைகளின் எதிர்கால அசைவுகளின் முதன்மைக் குறிகாட்டிகள் என்பதால் அவையும் முக்கியமானவையாகும்.

ஒரு நுகர்வோர் விலைச்சுட்டெண் நுகர்வோர் பண்டங்கள் மற்றும் சேவைகளின் பிரதிநிதித்துவக் கூடையொன்றின் விலைகளின் பொதுவான அசைவை அளவிடுகின்றது. நுகர்வோர் செலவிடும் மாதிரிகளின் அளவையை அடிப்படையாகக் கொண்டு, கூடையில் பண்டங்களும் சேவைகளும் உள்ளடக்கப்பட்டு, மொத்தச் செலவினத்தில் சார்பு முக்கியத்துவத்துக்கிணங்க அவற்றுக்கு நிறைகள் குறித்தொதுக்கப்படுகின்றன. அதாவது,

| அட்டவணை 1 - நுகர்வோர் விலைச்சுட்டெண் (நு.வி.சு) ஓர் உதாரணம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | அலகு | மாதமொன்றுக்குநுகரப்பட்ட அலகுகளின் எண். | அலகு விலைகள் | | | விலைகளுடன் செலவினம் | | | விலைகளில் மாற்றம் | |
| | | | அடியாண்டில் ரூபா | ஆண்டு ஒன்று ரூபா | ஆண்டு இரண்டு ரூபா | அடியாண்டில் ரூபா | ஆண்டு ஒன்று ரூபா | ஆண்டு இரண்டு ரூபா | ஆண்டு ஒன்று % | ஆண்டு இரண்டு % |
| அரிசி | கிகி | 20 | 20.00 | 22.00 | 23.00 | 400.00 | 440.00 | 460.00 | 10.0 | 4.5 |
| பாண் | 450கி | 10 | 8.00 | 9.00 | 10.00 | 80.00 | 90.00 | 100.00 | 12.5 | 11.1 |
| அவரை | கிகி | 5 | 40.00 | 45.00 | 46.00 | 200.00 | 225.00 | 230.00 | 12.5 | 2.2 |
| தேங்காய் | காய் | 12 | 10.00 | 7.00 | 11.00 | 120.00 | 84.0 | 132.00 | -30.0 | 57.1 |
| மீன் (சூரை) | கிகி | 2 | 125.00 | 132.00 | 135.00 | 250.00 | 264.00 | 270.00 | 5.6 | 2.3 |
| சீனி | கிகி | 3 | 30.00 | 28.00 | 31.00 | 90.00 | 84.00 | 93.00 | -6.7 | 10.7 |
| மின்சாரம் | உவாற்று | 60 | 5.00 | 6.00 | 6,30 | 300.00 | 360.00 | 375.00 | 20.0 | 4.2 |
| பஸ்கட்டணம் | பயணம் | 40 | 7.00 | 8.00 | 8.50 | 280.00 | 320.00 | 340.00 | 14.3 | 6.3 |
| மொத்தம் | - | - | - | - | - | 1720.00 | 1867.00 | 2000.00 | | |
| சுட்டெண் | - | - | - | - | - | 100.00 | 108.60 | 116.30 | | |
| பணவீக்கம் | | - | - | - | - | - | | | 8.6% | 7.1% |

நுகர்வோரின் மொத்தச் செலவினத்தில் பெரும் பகுதிக்குக் காரணமாயுள்ள பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் கூடுதலான நிறைகள் குறித்தொதுக்கப்படுகின்றன. மொத்த நுகர்வுச் செலவினம், அல்லது எளிதாகக் கூறுவதாயின் வாழ்க்கைச் செலவு, விலைகள் மாறாதுள்ள போது நுகர்வுக் கூடையின் மாற்றங்கள் காரணமாக அல்லது நுகர்வுக் கூடை மாறாதுள்ளபோது விலைகளின் மாற்றங்கள் காரணமாக அல்லது அவை இரண்டிலும் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக காலப்போக்கில் வேறுபடலாம். இருப்பினும், நுகர்வு மாதிரியைப் பாதிக்கும் அனேகமான காரணிகள் மெதுவாகச் சீர்செய்யப்படுவதால், முழுமையாக சமூகத்தின் சராசரி நுகர்வுக்கூடை 3 தொடக்கம் 5 வருடங்கள் வரையான காலப்பகுதியில் பொதுவாக பெருமளவில் நிலையாக இருக்கும் என அனுமானித்தல் நியாயமானதாகும். நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் நுகர்வுக்கூடை மாறாதிருப்பதாக அனுமானித்தால், அதன் அசைவுகள் கூடையிலுள்ள பொருட்களின் விலை மாற்றங்களின் தேறிய தாக்கத்தை மட்டுமே பிரதிபலிக்கின்றன.

அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள உதாரணத்தில், நுகர்வுக்கூடைக்கான செலவும் அவ்வாறே, மதிப்பிடப்பட்ட நுகர்வோரின் விலைச்சுட்டெண்ணும் ஆண்டு 1 இல் இருந்து ஆண்டு 2 இற்கு 8.6 சதவீதத்தால் அதிகரித்து, கூடை மாறாதுள்ளதால் முதல் இரண்டு ஆண்டுகளுக்கிடையில் பொதுவிலை மட்டத்தின் மாற்றங்களை மட்டுமே பிரதிபலித்தது.

நாம் தனிப்பட்ட விலைகளை விட மொத்த விலைச் சுட்டெண்ணின் மாற்றத்தில் கவனம் செலுத்துகின்றோம். ஏனெனில், நுகர்வோருக்குக் கூடுதலான முக்கியத்து வமுடையதாக இருப்பது பல்வேறு விலை மாற்றங்கள் காரணமாக தனிப்பட்ட விலைகளுக்கு என்ன நடைபெறுகின்றது என்பதை விட அவற்றின் ஒட்டுமொத்த வாழ்க்கைச் செலவுக்கு என்ன நடைபெறுகின்றது என்பதாகும்.

இலங்கையில் தற்போது உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தப்படும் விலைச்சுட்டெண் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகும். 1952 இல் கொழும்பு மாநகரசபைப் பிரதேச எல்லைக்குள் குடும்பங்களின் மாதாந்த வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த 40 சதவீதமான குடும்பங்கள் செலவிடும் மாதிரிகளின் அடிப்படையில் இது ஆக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ விலைச்சுட்டெண்ணைத் தொகுக்கின்ற குடிமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் எனப்படும் ஒரு புதிய விலைச்சுட்டெண்ணை அறிமுகப்படுத்தி உள்ளது. காலம் கடந்த பண்டங்களினதும் சேவைகளினதும் கூடை, வருமானக் குழுக்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட அளவில் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்கள் போன்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் உள்ள பலவீனங்களை நிவர்த்திப்பதற்காக இது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 1995 இற்கும் 1997 இற்கும்

இடையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக முழு நாட்டிலுமுள்ள ஆகக் குறைந்த 80 சதவீதமான குடியிருப்பாளர்களின் செலவிடும் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டது.[2] எவ்வாறாயினும் இது இன்னும் உத்தியோகபூர்வ விலைச் சுட்டெண்ணாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எந்தவொரு அபிவிருத்தியடைந்துவரும் நாட்டிலும் உள்ளவாறு, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பன உணவுக்கும் பானங்களுக்கும் கூடுதலான நிறையை (சுமார் 65 சதவீதம்) குறித்தொதுக்கி, இலங்கையில் சராசரி நுகர்வோரின் செலவிடும் மாதிரியைப் பிரதிபலிக்கின்றன. இலங்கையில் பொது விலை மட்டங்களின் அசைவுகளை அளப்பதற்கு வேறு இரு சுட்டெண்கள் கிடைக்கத்தக்கதாயுள்ளன. அவையாவன: அடிப்படைச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (மொ.வி.வி.சு), மற்றும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (மொ.உ.உ) கணிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லாப் பண்டங்களையும் சேவைகளையும் கொண்ட பொதுவிலை மட்டத்தின் மிகப் பரந்த அளவீடான மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி என்பனவாகும்.

## பணவீக்கம் அல்லது பணச்சுருக்கம் என்றால் என்ன?

பணவீக்கம் என்பது விலைகளின் அதிகரிப்பு பற்றியது என்பது அனேகமான மக்களுக்குத் தெரியும். ஆயினும், பணவீக்கம் என்பது வெறுமனே தனிப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகளின் விலைகளின் அதிகரிப்பைப் பற்றியது அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். ஏனெனில் சந்தைப் பொருளாதாரமொன்றில் எப்பொழுதும் விலைகள் அதிகரிப்பது அல்லது வீழ்ச்சியடைவது, ஒரு நிகழ்ச்சியாகும். பணவீக்கம் பொருளாதாரம் முழுவதிலும் விலைகளின் பரவலான அதிகரிப்பை ஒரு காலப்பகுதியில் பிரதிபலிக்கும் பொதுவான தோற்றப்பாடாகும். அது பொதுவிலைமட்டத்தின் தொடர்ச்சியான அதிகரிப்பைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளியல் சொல்லாகும். அவ்வாறே பணச்சுருக்கம் பொது விலைமட்டத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. ஒரு நாட்டிலுள்ள பொதுவிலை மட்டத்தைப் பிரதிபலிக்கும் ஏதேனும் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் பணவீக்கம்/ பணச்சுருக்கம் என்பனவற்றை மதிப்பிடப்படலாம். பணவீக்கம் குறைவடைதல், (சிலவேளைகளில் 'குறைப்பணவீக்கம்' எனக் குறிப்பிடப்படும்) நுகர்வோர் விலை மட்டங்களில் பொதுவான குறைவைக் குறைப்பதில்லை என்பதை விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும். அது எதைக் குறித்துக் காட்டுகிறது என்றால் பொதுவிலை மட்ட அதிகரிப்பு குறைவடைவதையாகும். இரண்டாம் ஆண்டிலும் எல்லாத் தனிப்பட்ட விலைகளும் அதிகரித்தபோதிலும் கூட, முதலாம் ஆண்டில் 8.6 சதவீதமாக இருந்த பணவீக்கம் இரண்டாம் ஆண்டில் 7.1 சதவீதமாகக் குறைந்திருப்பது அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள உதாரணத்தில் தெளிவாகின்றது. ஒரு பணச்சுருக்கம் மட்டுமே மொத்த நுகர்வோர் விலை மட்டங்களின் பொதுவான குறைவை குறித்துக் காட்டுகின்றது. இவ்வாறாக, விலை உறுதிப்பாடு என்பதன் பொருள் குடும்ப அலகுகளினதும் தாபனங்களினதும் பொருளாதாரத் தீர்மானங்களை பாதிக்கும் அளவுக்கு உறுதியற்ற குறைவான பணவீக்கம் அல்லது பணச்சுருக்கம் ஆகும்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பிரகாரம், கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்த 40 சதவீத வருமான வகுதியினுள் உள்ள சராசரிக் குடும்பம் ஒன்றினால் பயன்படுத்தப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் கூடையின் செலவு 1952 இல் சுமார் ரூபா.200 ஆகும். அதே கூடையில் உள்ள பொருட்களின் செலவு 2002, 2003 மற்றும் 2004 இல் முறையே ரூபா. 6,424, ரூபா 6,830 மற்றும் ரூபா 7,347 ஆகும். 1952 - 2004 காலப்பகுதிக்கான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில் இலங்கையின் வருடாந்த சராசரி பணவீக்கம் 7.3 சதவீதமாக இருப்பதை இது பிரதிபலிக்கின்றது. (அட்டவணை 2) 2002இல் பணவீக்கம் 9.6 சதவீதமாகக் காணப்பட்டது. இது 2003 இல் 6.3 சதவீதமாகக் குறைவடைந்தது. ஆனால், 2004 இல் 7.6 சதவீதமாக அதிகரித்தது. எனினும், மொத்தக் கூடையினுள் 2004 இல் பணவீக்கம் 7.6 சதவீதமாக இருந்தபோதிலும், (அதாவது, 2003 இல் இருந்து 2004 இற்கு மொத்த விலைமட்டத்தின் அதிகரிப்பு 7.6 சதவீதமாக இருந்தது) 2004 இல் வேறு சில

2/ 1995 / 96 நுகர்வோர் நிதி அளவீட்டின் கீழ் இவ்விரு மாகாணங்களையும் உள்ளடக்குவதற்கு குடிமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு முடியவில்லை

பொருட்களின் விலைகள் ஏனையவற்றை விட அதிகமாக இருந்திருக்கலாம் என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். உண்மையில், 2004 இல் சில பொருட்களின் விலைகள் மெய்யாகவே குறைந்திருப்பதற்கான சாத்தியப்பாடும் உண்டு.

## விலை உறுதிப்பாடு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?

விலை உறுதிப்பாடு பல நன்மைகளைக் கொண்டுள்ளதால் அதனைப் பேணுதல் முக்கியமாகும். மாறாக, அது பேணப்படாதுள்ளபோது, பணவீக்கத்தின் அல்லது பணச்சுருக்கத்தின் விளைவுகள், மிக மோசமான தாக்கத்தைக் கொண்டிருக்கும். எதனை உற்பத்தி செய்வது, எவ்வாறு உற்பத்தி செய்வது என்பன பற்றிய சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உறுதிப்பாடான விலைகள் வழி செய்வதால், அவ்வாறாக வளங்களின் மிகவும் வினைத்திறமையான ஒதுக்கீட்டுக்கு வசதி செய்வதால், விலை உறுதிப்பாடு பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகின்றது என்பதைப் பல நாடுகளின் அனுபவங்கள் தெரிவிக்கின்றன. பொருளாதார முகவர்கள் பணவீக்கத்துக்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அருமையான வளங்களை வேறு வழியில் செலுத்துவதையும் விலை உறுதிப்பாடு தவிர்க்கின்றது. விலைகள் உறுதியாக இருப்பின், நீண்டகால முதலீடுகள் மற்றும் சேமிப்புகள் தொடர்பான இடர்களுக்கு எதிராகத் தாங்கள் நட்டஈட்டினை, அதாவது, உயர்ந்த வட்டி வீதம் போன்ற இடர் கட்டணங்களை முதலீட்டாளர்களும் சேமிப்பாளர்களும் கோரமாட்டார்கள். உண்மையில், தொடர்ச்சியான உறுதியற்ற விலைகளின் விளைவாக கூடிய இடர் கட்டணம் கோரப்படுவதுடன் நீண்டகால சேமிப்புகள் மற்றும் முதலீடுகள் ஆகிய இரண்டையும் அதைரியப்படுத்தலாம்.

பணவீக்கம் விலைக் குறிகாட்டிகளைத் திரிபுபடுத்துவதாலும், சேமிப்புகளைக் குறைப்பதாலும், முதலீடுகளை அதைரியப் படுத்துவதாலும், உற்பத்தி முதலீட்டிலிருந்து உற்பத்தி அல்லாத முதலீடுகளுக்கு (விலையுயர்ந்த உலோகங்கள் மற்றும் அசைவற்ற சொத்து போன்றவை) மூலதனப் பாய்ச்சலை ஊக்குவிப்பதாலும், வளர்ச்சியைத் தடை செய்வதுடன் பொருளாதாரத் திட்டமிடலை ஒரு கனவாக்குவதாலும் மிக மோசமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. சமூகத்திலுள்ள நிரந்தர வருமானம் பெறுவோர், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குழுக்கள் ஆகிய மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களின் பணவீக்கத்துக் கெதிரான பாதுகாப்பு மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் மீது விகிதாசாரமற்ற விளைவையும் அது கொண்டுள்ளது. பணவீக்கச் செலவு அதன் மட்டம், மாறும் இயல்பு உச்ச வடிவம், அதாவது மிகைப் பணவீக்கம் என்பவற்றுடன் அதிகரித்து, பாரிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் இழப்புக்களுக்குக் காரணமான பொதுமக்களின் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும். அதேபோன்று பணச்சுருக்கமும் முதலீட்டை அதைரியப்படுத்தல், பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்தல், தொழில் வாய்ப்பின்மையையும் வறுமையையும் அதிகரித்தல் மற்றும் நாடொன்றின் பொருளாதார, சமூக, அரசியல் உறுதிப்பாடின்மையைத் தோற்றுவிக்கும் பொருளாதார இறக்கம் எனப்படும் அதன் உச்ச வடிவம் போன்ற பல மோசமான விளைவுகளைக் கொண்டுள்ளது. பல்வேறான பொருளாதார, சமூக நோக்கங்களை மக்கள் எய்துவதற்கு குறைந்த, நிலையான அளவில் பணவீக்கத்தினைப் பேணுவது மிக அடிப்படையானதாகும். முக்கியமாக, முதலீடு, வெளியீடு மற்றும் வேலைவாய்ப்பு என்பன தொடர்ச்சியான வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஆக்கக்கூறாகும்.

பணவீக்கம் மிகவும் விரும்பத்தகாதது ஆயின், குறைவான பணவீக்கத்தை விட பூச்சியப் பணவீக்கத்தை நாம் ஏன் இலக்காகக் கொள்ளக்கூடாது என ஒருவர் கேட்கலாம். அதன் பகுதியளவான பதில் பணவீக்கத்தின் அளவீட்டுடன் தொடர்புடையதாகும். ''அளவிடப்பட்ட'' பணவீக்கம் ஓரளவுக்கு ''உண்மையான'' பணவீக்கத்தை மிகைப்படுத்திக் காட்டலாம். பணவீக்கத்தைச் சரியாக மதிப்பிடுவதற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளின் தரம் மாறாமல் பேணுவதோடு விலை மாற்றங்களும பதிவு செய்யப்படல் வேண்டும். எனினும், அது எப்போதும் சாத்தியமானதல்ல. பதிவு செய்யப்பட்ட சில விலை அதிகரிப்புகள் மேலதிக அம்சங்களை அல்லது பண்டங்கள மற்றும் சேவைகளினுள் உயர்ந்த தரத்தை உள்ளடக்கிக் காட்டலாம். சார்பு விலைகளின் மாற்றங்களை காண்பிப்பதற்கு ஒரு சிறிய பணவீக்கமாவது தேவைப்படுகின்றது.

**அட்டவணை - 2 இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட விலைச்சுட்டெண்களின் போக்கு [ஆண்டுச் சராசரி மாற்றம் (%)]**

| காலம் | கொ.நு.வி.சு | இ.நு.வி.சு. | மொ.வி.வி.சு | மொ.உ.உ. (%) பணச் சுருக்கி |
|---|---|---|---|---|
| 2004 | 7.6 | 7.9 | 12.5 | 9.2 |
| 2003 | 6.3 | 2.6 | 3.1 | 5.0 |
| 2002 | 9.6 | 10.2 | 10.7 | 8.5 |
| 2001-2004 | 9.4 | 8.2 | 9.5 | 8.8 |
| 1991-2000 | 9.7 | | 7.4 | 8.9 |
| 1981-1990 | 12.4 | | 11.7 | 11.7 |
| 1974-1980 | 8.9 | | 15.3 | 12.5 |
| 1961-1970 | 3.0 | | | 1.9 |
| 1952-1960 | 0.4 | | | 2.6 |
| 1952-2004 | 7.3 | | | 7.8 |

குறிப்பு: மொ.வி.வி.சு வின் அடியாண்டு 1974 உம் இ.நு.வி.சு. வின் அடியாண்டு 1996 ஆகும்.

சில விலைகளும் கூலிகளும் பெருமளவு (கீழ்நோக்கிய) நெகிழ்ச்சியற்றதாக இருப்பது உண்மையாகும். எனவே, பூச்சிய பணவீக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டால் அது எதிர்பாராத பணச்சுருக்கத்துக்கு இட்டுச் செல்லும். மேலும், சந்தையில் அறவிடப்படுகின்ற பெயரளவிலான வட்டி வீதங்கள் எதிர்மறையாக இருக்க முடியாதாகையால், சில சமயங்களில் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு, மிக மோசமான சூழ்நிலைகளில் பணவீக்கம் ஓரளவு பாதுகாப்பை அளிக்கலாம். பொருளாதாரத்தைத் தேக்க நிலையில் எதிர்மறையான மெய்வட்டி வீதம் எவ்வாறு ஒரு உந்து சக்தியாக இருக்கிறதோ அவ்வாறே இத்தகைய நிலையுமாகும். ஆகையால், பூச்சியப் பணவீக்கத்தைக் குறிக்கோளாக இலக்கு வைக்கத் தேவையில்லை. பூச்சியத்துக்கு அண்மிய பணவீக்கம் நீண்டகால வளர்ச்சி எதிர்பார்ப்புகளுடன் இணக்கமின்றி தாங்கக்கூடியதாக இருக்கலாம். எனவே, சுருங்கக் கூறின், பணவீக்கமும் பணச்சுருக்கமும் மிகக் கடுமையான பொருளாதார, சமூக, அரசியல் எதிர்விளைவுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை விலை உறுதிப்பாடானது ஒவ்வொருவருக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான உகந்த சூழலை அளிக்கின்றது.

## விலை உறுதிப்பாட்டைப் பாதிக்கும் காரணிகள் எவை?

திறந்த சந்தைப் பொருளாதாரமொன்றில், நிலவுகின்ற கேள்வி, நிரம்பல் நிலைமைகளையும் அவற்றின் மாற்றங்களையும் விலைகள் காட்டுகின்றன. குறுகிய காலத்தில், கேள்வியையும் நிரம்பலையும் பாதிக்கும் பல காரணிகள் உள்ளன. உ-ம் வானிலை, சமூக, கலாசார நிகழ்ச்சிகள், மக்களின் கொள்வனவுச் சக்தி, நுகர்வோரின் தெரிவுகள், புதிய கண்டுபிடிப்புகள், உற்பத்தித் திறன் போன்றவை. அறுவடை காலத்தில் பெருமளவு நிரம்பல் காரணமாக அரிசியின் விலைகள் வீழ்ச்சியடைவதையும் வரட்சியைத் தொடர்ந்து உற்பத்திக் குறைவின் பிரதிபலிப்பாக மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரிப்பதையும் நாம் அறிவோம். அவ்வாறே, பொதுவாக, புதுவருடம், கிறிஸ்மஸ் போன்ற விழாக்காலங்களில் வழக்கமான நிரம்பலை விட கேள்வி அதிக அளவில் இருப்பதால் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. எனினும், பருவ காலக் காரணங்களின் விளைவாக நிகழும் அத்தகைய விலைமாற்றங்கள் தற்காலிகமான தோற்றப்பாடுகளாகும். குறுகிய காலத்தில் விலைகள் மீண்டும் தாமாகவே சீராகின்றன.


மக்களிடம் செலவுக்கு அதிக பணம் இருப்பின் கூடுதலான பண்டங்களையும் சேவைகளையும் அவர்கள் கோருவார்கள். பண்டங்கள் மற்றும் சேவைகளின் நிரம்பல் அவற்றுக்கான கேள்வியின் அதே வீதத்துடன் அதிகரிக்காவிட்டால் பணத்தின் நிரம்பலின் விரிவாக்கத்துடன் மொத்த (கூட்டு) கேள்வி மட்டம் அதிகரிக்கும்போது விலைகள் அதிகரிக்கும். எனினும், நிரம்பலின் விரிவாக்கம் உள்ளீடுகள் கிடைத்தல் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்கள் போன்ற அதன் சொந்த வரையறைகளைக் கொண்டுள்ளது. எனவே, பண்டங்கள் மற்றும் சேவைகளின் கிடைப்பனவின் அதே அளவான அதிகரிப்பு இன்றி, பெருமளவு பணம் மக்களின் கைகளுக்குக் கிடைத்தல் பணவீக்கத்துக்கு வழிகோலும் அடிப்படையான கேள்விப் பக்கக் காரணியாகும். இது பொதுவாக, "அதிகளவு பணம் மிகக் குறைந்த பொருட்களைத் துரத்துகின்ற" சூழ்நிலையாகக் குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறே, மக்களிடம் செலவிடுவதற்கு மிகக் குறைந்தளவு பணம் இருப்பின், போதிய கேள்வி இன்மையால் உற்பத்தி குறைவடைந்து, குறைவான பொருளாதார வளர்ச்சிக்கும் அதிகளவான வேலை வாய்ப்பின்மைக்கும் வழிகோலும் அதேவேளையில், சராசரி விலை மட்டத்தில் ஒரேயடியான அதிகரிப்புகள் நிகழலாம். உதாரணமாக, மோசமான அறுவடையின் விளைவாக உணவுப் பொருட்களின்

விலைகள் அதிகரித்தல் அல்லது எண்ணெய் விலை உயர்வு உற்பத்திச் செலவை அதிகரித்தல். எனினும், அத்தகைய அதிகரிப்புகள் பொதுவிலை மட்டத்தின் தற்காலிக உயர்வுக்கு மட்டுமே இட்டுச் செல்லும். அது பணவீக்கம் ஆவதற்கு பணநிரம்பல் அதிகரிப்பினால் அது தூண்டாடப்படல் வேண்டும். எனவே, நீண்டகால இடைவெளியில் உண்மையான பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது மிகையான பண விரிவாக்கத்தின் மூலம் பணவீக்கம் ஏற்படுகின்றது என பொருளியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். நோபல் பரிசு பெற்ற பொருளியலாளரான மில்டன் பிரைட் மன் இதனை மிகவும் நம்பத்தகுந்த வகையில் விபரித்தார். ‘பணவீக்கம் என்பது எப்போதும் எங்கும் காணப்படும் ஒரு பணத் தோற்றப்பாடாகும்’ என நோபல் பரிசுக்கான விரிவுரையிலே குறிப்பிடுகின்றார். வேறு விதமாகக் கூறுவதாயின், இறுதி விளைவாக, பண நிரம்பல் அதிகரிப்பு இன்றி பணவீக்கம் நிகழமுடியாது.


## பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எவை?

எக்காரணிகளால் பணவீக்கம் ஏற்பட்டதென்பதைப் பொறுத்து, குறிப்பாகக் குறுகிய காலத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. ஏனெனின் பல்வேறு அமையக் காரணிகள் பணவீக்கம் வரக் காரணமாகவுள்ளன. குறுகிய காலப்பகுதியில், பிரதானமாக நிரம்பல் பக்கத்துக் காரணிகள் அல்லது கட்டமைப்பு விடயங்கள் பணவீக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது பொதுவாக உணரப்படுகின்றது. எனவே, கொள்கை நடவடிக்கைகள் அத்தகைய விடயங்களைத் தீர்ப்பதிலும் உற்பத்தியை விரிவாக்குவதிலும் மேற்கொள்ளல் வேண்டும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில், துரித வளர்ச்சியிலிருந்து கிடைக்கும் கூடுதலான வருமானம் மற்றும் உற்பத்திச் செலவை அதிகரிக்கும் செலவுத் தூண்டல் காரணிகள் என்பவற்றுடன் தொடர்பான நிகழக்கூடிய பணவீக்க அழுத்தத்தைத் தவிர்ப்பதற்கு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் உரிய கவனம் செலுத்துதல் அவசியமாகும். எனினும், இறுதியில், பணவீக்கம் அடிப்படையில் ஒரு நாணய தோற்றப்பாடாதலால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் (அதாவது, விலை உறுதிப்பாட்டை அடைந்து பேணுதல்) தகுந்த மட்டத்தில் நாணய விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தகுந்த நாணயக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் மத்திய வங்கிகள் பிரதான பங்கு வகிக்கின்றன. விலைக்கட்டுப்பாடுகளின் ஊடாக பணவீக்கத்தைக்

வரைபடம் 1 - இலங்கையில் விரிந்த பண (M2) வளர்ச்சியும் பணவீக்கமும்: 1955 - 2004




வரைபடம் 2 - இலங்கையில் நுகர்வோர் விலைகளில் வருடாந்த மாற்றங்கள்: டிசம்பர் 1999 - ஜுலை 2005




அட்டவணை 3 - நுகர்வோர் விலை பணவீக்கம் (வருடாந்த சராசரி)

நூற்றுவீதம்

| | 1980 | 1985 | 1990 | 1995 | 2000 | 2004 |
|---|---|---|---|---|---|---|
| ஐஅமெரிக்கா | 13.5 | 3.6 | 5.4 | 2.8 | 3.4 | 2.7 |
| ஜப்பான் | 7.8 | 2.0 | 3.1 | -0.1 | -0.7 | 0.0 |
| போலாந்து | 9.7 | 11.5 | 555.4 | 28.1 | 10.1 | 3.6 |
| ஆர்ஜன்டீனா | 100.8 | 672.2 | 2314.0 | 3.4 | -0.9 | 4.4 |
| பொலீவியா | 47.2 | 11,749.6 | 17.1 | 10.2 | 4.6 | 4.4 |
| பெரு | 59.2 | 163.4 | 7481.7 | 11.1 | 3.8 | 3.7 |
| இந்தியா | 11.4 | 5.6 | 9.0 | 10.2 | 4.0 | 3.8 |
| சிங்கப்பூர் | 8.5 | 0.5 | 3.5 | 1.7 | 1.4 | 1.7 |
| பாகிஸ்தான் | 11.9 | 5.6 | 9.1 | 12.3 | 4.4 | 7.4 |
| துருக்கி | 110.2 | 45.0 | 60.3 | 88.1 | 54.9 | 8.6 |
| இலங்கை | 26.2 | 1.5 | 21.5 | 7.7 | 6.2 | 7.6 |

மூலம்: சர்வதேச நிதியியல் புள்ளிவிபரங்கள்

கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் நடைமுறைச் சாத்தியமற்றதாகவும், தேவையான பண்டங்களைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதன் மூலமும் இலஞ்சங்களையும் தரகுகளையும் செலுத்துவதன் மூலமும் இதன் விளைவாக அதிக விலைகளைத் தாங்கிக் கொள்ளுமாறும் மக்கள் வேண்டுகின்றனர் என பல நாடுகளின் அனுபவங்கள் காட்டுகின்றன. மேலும் தட்டுப்பாடுகள் கறுப்புச் சந்தைகளை தோற்றுவிக்கின்றன. அங்கு மேலும் அதிக விலைகளைச் செலுத்த நேரிடும். இவை பொருளாதாரத்தின் மொத்த இழப்புக்கள் (உயர்வுச் சுமை இழப்புக்கள் எனப்படும்) ஆகும். அத்துடன் அவை நீண்டகால பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்கின்றன. ஆதலால் குறிப்பாக உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கின்ற அதேவேளை நாணய விரிவாக்கத்தை கட்டுப்படுத்துவதன் ஊடாக தாக்குப்பிடிக்கக்கூடிய அடிப்படையில் மிகையான நாணய விரிவாக்கத்தினால் உருவாக்கப்படும் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். இம்முயற்சியில் குறிப்பாக இலங்கை அடங்கலாக அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகளில் காணப்படுகின்றவாறு அரசாங்கம் மிகையான கடன் பெறல் (அதாவது கூடுதலான இறை பற்றாக்குறைகளின் விளைவாக) காரணமாக மிகையான நாணய விரிவாக்கம் ஏற்படுகின்ற போது நிரப்புக் கொள்கைகளாக ஆதரவான இறை நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலும் விலை உறுதிப்பாட்டை அடைவதற்கு அவசியமாகும்.

## பணம் என்றால் என்ன?

விலை உறுதிப்பாட்டைப் பாதிக்கும் ஓர் அடிப்படை ஏதுவான காரணி பண நிரம்பலின் மாற்றங்கள் என மேலே பார்த்தோம். எனவே பணமென்றால் என்ன, அதன் நிரம்பல் எவ்வாறு விரிவடைகின்றது, சுருங்குகின்றது என்பன பற்றி விளங்கிக் கொள்ளுதல் பயன்மிக்கதாகும். பொதுமக்களால் விளங்கிக் கொள்ளப்பட்டவாறு பணம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நாணயத்தாள்களையும் குற்றிகளையும் உள்ளடக்குகிறது. ஆனால் பணமாகப் பயன்படும் எல்லாப் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் அது காட்டுவதில்லை. பணம் எமது நாளாந்த வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாகும். அது வேலை செய்வதன் மூலம் சம்பாதிக்கலாம்; எமக்குத் தேவையான பொருட்களுக்காக இப்போது செலவிடப்படலாம், எதிர்கால செலவுக்காக சேமிக்கப்படலாம் அல்லது உடனடிப் பயன்பாட்டிற்காக கடன் பெறப்படலாம். எனினும் பணம் அதுவாகவே பயனற்றதாகும். அது எதனைக் கொள்வனவு செய்கின்றதோ அதிலேயே அதன் பெறுமதி தங்கியுள்ளது. ரூபாய் எனப்படும் பொதுவான சொல் அதுவாகவே மாற்றமடையாதாகையால் ஒரு ரூபாய் என்பது எப்போதும் ஒரு ரூபாவே தான். ஆனால், ரூபாய் எதனைக் கொள்வனவு செய்யும், எவ்வளவு கொள்வனவு செய்யும் என்பன விலைகளின் மாற்றங்களைப் பொறுத்து வேறுபடுகின்றன. இவ்வாறாக, பண நிரம்பல் விலைகளைப் பாதிப்பதுடன் விலைகள் பணத்தின் பெறுமதியைப் பாதிக்கின்றன.

பொருளியலில், பணம் என்பது மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நாணயத் தாள்களும் குற்றிகளும் மட்டுமல்ல. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் இடப்பட்டுள்ள வைப்புகளும் வாய்ப்பான கொள்வனவுச் சக்தியை, அதாவது பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கான சக்தியை அவர்களுக்கு வழங்குவதால், அவற்றையும் இது உள்ளடக்குகின்றது. பொதுவாக, இலங்கையின் நாணய அபிவிருத்தியின் பகுப்பாய்வில் பணக் கூட்டுக்களின் (மொத்தம்) மூன்று வரைவிலக்கணங்கள் பயன்படுத்தப் படுகின்றன.[3] இதில் முதலாவது இ.ம. வங்கியினால் வழங்கப்பட்ட நாணயங்களையும் மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகளையும் உள்ளடக்கிய 'ஒதுக்குப் பணமாகும்.' கடன்களையும் வைப்புகளையும் உருவாக்கும் அவற்றின் நடைமுறை ஊடாக பண நிரம்பலின் பரந்த வரைவிலக்கணத்தின் கூறுகளான ஒதுக்குப் பணத்தின் அடிப்படையில் வைப்புகளை வர்த்தக வங்கிகள் உருவாக்க முடியுமாதலால் இது

3/ (i) $RM = C+CD$;
(ii) $M_1 = Cp+DDp$;
(iii) $M_2 = Cp + DDp + SFDp$

இங்கு,

C = மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் நாணயங்கள்
CD = மத்திய வங்கியில் வர்த்தக வங்கிகளின் வைப்புகள்
Cp = பொதுமக்களிடம் உள்ள நாணயம்
DDp = வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் இடப்பட்டுள்ள கேள்வி வைப்புகள்
$M_1$ = குறுகிய பணநிரம்பல்
$M_2$ = விரிந்த பண நிரம்பல்
RM = ஒதுக்குப் பணம்
SFDp = வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் இட்டுள்ள சேமிப்புகளும் நிரந்தர வைப்புகளும

ஒதுக்கம் அல்லது தளம் அல்லது உயர் வலுப்பணம் எனவும் அழைக்கப்படுகின்றது. இரண்டாவது, பொதுமக்களிடமுள்ள நாணயம் மற்றும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் இட்டுள்ள கேள்வி வைப்புகளின் தொகை என வரைவிலக்கணப்படுத்தப்படும் குறுகிய பணமாகும். மூன்றாவது பொதுமக்களிடமுள்ள பணம் மற்றும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் இட்டுள்ள எல்லா வைப்புகளின் கூட்டுத் தொகை என வரைவிலக்கணப்படுத்தப்படும் விரிந்த பணமாகும். பண நிரம்பலுக்கும் பொது விலைமட்டத்துக்கும் இடையிலான தொடர்பைப் பகுப்பாய்வதற்கு மிகவும் பொருத்தமான நாணயக் கருவி மேலே வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு விரிந்த பண நிரம்பலாகும் என ஆய்வுகள் காட்டுகின்றன.

## பண விரிவாக்கத்தைப் பாதிக்கும் அமயக் காரணிகள் எவை?

இலங்கையில், இலங்கை மத்தியவங்கியானது (இ.ம.வ.) பண நிரம்பலின் அடிப்படை மூலவளமாகும். பணமாக வெளியிடுவதற்காக வார்க்கப்பட்ட குற்றிகளையும் அச்சிடப்பட்ட நாணயத் தாள்களையும் இ.ம.வ அதன் நிலவறையில் கொண்டுள்ளது. எனினும் அவை பொதுமக்ளின் சொத்துகளாகும் வரை பணமாகமாட்டாது.

இலங்கை மத்திய வங்கியிலிருந்து பொருளாதாரத்துக்கு பணத்தை விடுவிக்கும் வழிகள் இரண்டு உள்ளன. ஒன்று அரசாங்கம் மற்றும்/அல்லது வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்குவதனூடாக இ.ம.வங்கியினால் உள்நாட்டுச் சொத்துக்கள் பெறப்படல். அரசாங்கம் அதன் அரசிறையை விட அதிகமாகச் செலவிடுகின்றபோது, அதன் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படும். அதற்கு கடன்பெறல் ஊடாக நிதியிடப்படல் வேண்டும். அரசாங்கமானது இ.ம.வ அடங்கலாக பல மூலவளங்களிலிருந்து கடன் பெற முடியும். இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறுவதன் மூலம், இ.ம.வ.யின் நிலவறையிலிருந்து நாணயத்தாள்கள் மற்றும் குற்றிகளின் வெளிப்பாய்ச்சலைத் தூண்டுகின்றது. அரசாங்கம் அதன் செலவுகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்கு அவற்றைப் பயன்படுத்தியதும் அவை பொதுமக்களினதும், வங்கித் தொழில் முறைமையினதும் சொத்துகளாகின்றன. மாறாக, இ.ம வங்கிக்கான தனது கடன்களை அரசாங்கம் கொடுத்துத் தீர்க்கின்றபோது முறைமைக்கு வெளியே, இலங்கை மத்திய வங்கியின் நிலவறையில் பணப்பாய்ச்சல் இடம்பெற்று அங்கு அச்சிடப்பட்ட தாள்கள் மற்றும் அடிக்கப்பட்ட குற்றிகள் என்னும் வடிவத்தில் பயனற்றுக் காணப்படுகின்றன. அவ்வாறே, வர்த்தக வங்கிகள் இ.ம. வங்கியிடமிருந்து கடன்பெறுகின்றபோது அல்லது திறைசேரி உண்டியல்கள் போன்ற தங்கள் பட்டியலிலுள்ள உள்நாட்டுச் சொத்துக்களை இ.ம. வங்கிக்கு விற்கின்றபோது பண நிரம்பல் விரிவடைகின்ற அதேவேளை வர்த்தக வங்கிகள் தங்கள் கடன்களை இ.ம. வங்கிக்குக் கொடுத்துத் தீர்க்கின்றபோது அல்லது இ.ம. வங்கியிடம் உள்ள திறைசேரி உண்டியல்களை அல்லது இ.ம.வங்கியினால் வெளியிடப்படும் பிணையங்களை வாங்கும்போது பணநிரம்பல் சுருங்குகின்றது.

மற்றைய வழி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இ.ம.வ யின் கொடுக்கல் வாங்கல்களாகும். இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்திடமிருந்து அல்லது வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்யும்போது அது ரூபாய் நாணயத் தாள்களிலும் குற்றிகளிலும் பணத்தைச் செலுத்தி பணநிரம்பலை விரிவடையச் செய்கின்றது. மாறாக, இ.ம.வ அதன் இருப்பிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிகளை அரசாங்கத்துக்கு அல்லது வர்த்தக வங்கிகளுக்கு விற்பனை செய்யும்போது இ.ம.வங்கிக்குப் பணப்பாய்ச்சல் மீண்டும் நிகழ்ந்து பண நிரம்பல் சுருங்குகின்றது.

நுகர்வோர்களுடனான வர்த்தக வங்கிகளின் செயற்பாடுகள், வைப்புகளையும் கடன்களையும் உருவாக்கும் நடைமுறை ஊடாக பண நிரம்பலின் மாற்றங்களுக்குப் பங்களிப்புச் செய்கின்றன. வங்கி முறைமையில் முழுமையாக வைப்பாளர்கள் தங்கள் வைப்புக்களின் ஒரு சிறு பகுதியை மட்டுமே மீளப் பெறுவதால், வர்த்தக வங்கிகள் எளிதாக வைப்பொன்றை உருவாக்குவதன் மூலம் கடன்களை உருவாக்கலாம். இந் நடவடிக்கை முறையில், வர்த்தக வங்கிகளின் நிதியியல் சொத்துகளைத் திரட்டுதல் (உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிலும்) மற்றும் தனியார் துறைக்கும் அரச துறைக்கும் கொடுகடன் விரிவாக்கல் (அதாவது, அரசாங்கம் மற்றும் பொதுக்கூட்டுத்தாபனங்கள்) என்பன பண

நிரம்பலைப் பாதிக்கும் 'பிரதான அமயக் காரணிகளாகும். அதற்கிணங்க உள்நாட்டுச் சந்தையில் நிதியியல் சொத்துக்களை (பிரதானமாக திறைசேரி உண்டியல்கள்) கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் ஊடாக நிதிச் செலவுகளில் மற்றும்/அல்லது பணம் கிடைப்பதில் மாற்றங்களைத் தூண்டுவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியானது பண விரிவாக்கலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## விலை உறுதிப்பாட்டை அடைவதற்கு நாணயக் கொள்கை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது?

செலவிலும் (வட்டி வீதங்கள்) பணம் கிடைப்பதிலும் (கடன்) செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் மத்திய வங்கியின் குறிக்கோளான விலை உறுதிப்பாட்டை அடைவதற்கு அது மேற்கொள்ளும் வழிவகை நாணயக் கொள்கையாகும். மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் நியதிச்சட்ட ஒதுக்கத் தேவைகளும் (நி.ச.ஒ.தே) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் (தி.ச.தொ) ஆகும். நியதிச் சட்ட ஒதுக்கத் தேவைகளின் கீழ், வர்த்தக வங்கிகள் தங்கள் வைப்புக்களின் ஒரு பகுதியை இ.ம.வங்கியில் இடல் வேண்டும் என்னும் தேவைப்பாட்டை அது விதிக்கலாம். நியதிச் சட்ட ஒதுக்கத் தேவைப்பாட்டை மாற்றுவதன் மூலம் வர்த்தக வங்கிகளின் கடனை உருவாக்கும் ஆற்றலில் இ.ம.வ செல்வாக்குச் செலுத்தலாம். ஆதலால் விரிந்த பணநிரம்பல் மற்றும் சந்தை வட்டி வீதங்கள் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தலாம். திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், வர்த்தக வங்கிகளுடனான அதன் கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரயோகிக்கத்தக்க கொள்கை வட்டிகளை மாற்றுவதன் மூலம் மற்றும் அல்லது திறைசேரி உண்டியல்களையும் மத்திய வங்கிப் பிணையங்களையும் வியாபாரம் செய்வதன் மூலம் பணநிரம்பலிலும் சந்தை வட்டிவீதங்களிலும் இ.ம.வ. செல்வாக்குச் செலுத்துகிறது.

மத்திய வங்கியினால் நிறுவப்பட்ட நாணயக் கொள்கையின் மாற்றங்கள் பொதுவிலை மட்டத்தையும் பொருளாதாரத்தில் வெளியீட்டையும் பாதிக்கும் நடவடிக்கை முறை நாணயக் கொள்கை மாற்றல் நுட்பம் எனக் குறிப்பிடப்படுகின்றது. பொருளாதாரத்தின் ஊடாக நாணயக் கொள்கை மாற்றங்கள் செலுத்தப்படுகின்ற வழிகள் பல உண்டு. (உரு 1) இவை பின்வருமாறு அடையாளம் காணப்படுகின்றன: (i) வட்டி வீத வழி (இதன் மூலம் வட்டி வீதங்களின் மாற்றங்கள் ஊடாக பொருளாதாரம் தாக்கமடைகின்றது.) (ii) கொடு கடன்வழி (இதன் மூலம் கடன் கிடைப்பதில் மாற்றங்கள் மூலம் பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுகின்றது.) (iii) செலாவணி வீத வழி (இதன் மூலம் செலாவணி வீத மாற்றங்கள் ஊடாக பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுகின்றது.) மற்றும் (iv) செல்வ வழி (இதன் மூலம் சொத்துக்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் செல்வத்தின் மீது அவற்றின் தாக்கம் என்பவற்றின் ஊடாக பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுகின்றது.) இவ்வழிகளில், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், வட்டி வீதம் மற்றும் கொடுகடன் வழிகளுக்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. கொள்கைக் கருவிகளிலிருந்து (அதாவது, நி.ச.ஒ.தே. அல்லது தி.ச.தொ) இடைக்கால இலக்குகளுக்கும் அதனைத் தொடர்ந்து இறுதி இலக்குகளுக்கும் (அதாவது விலைகள் மற்றும் வெளியீடு) நாணயக் கொள்ளைத் தாக்கத்தைச் செலுத்தும் நடவடிக்கை முறையில் வேறுபட்டதும் நீண்டதுமான, சில வேளைகளில் இரண்டு வருடங்கள் வரை நீடிக்கும், தாமதங்கள் உள்ளன என்பதையும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும்.

இலங்கையில், நாணயக் கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ள அதிகாரசபை இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) ஆகும். நாணய விதிச்சட்டம் (நா.வி.ச) எனப்படும் சட்டவாக்கத்தின் கீழ் இ.ம.வ தாபிக்கப்பட்டுத் தொழிற்படுகின்றது. விலை உறுதிப்பாட்டை அடைவதில் நாணய முகாமைத்துவத்துக்காக இ.ம.வங்கியினால் பயன்படுத்தப்படக்கூடிய பலதரப்பட்ட கொள்கைக் கருவிகளை இச்சட்டம் வழங்குகின்றது.[4] இலங்கை மத்திய வங்கி ஒதுக்குப் பணத்தை தொழிற்பாட்டு இலக்காகவும் விரிந்த பணத்தை இடைக்கால நாணக் கொள்கை இலக்காகவும் கொண்டு நாணய இலக்கு வரைவுச்சட்டமொன்றைப் பின்பற்றுகின்றது.[5] அது படிப்படியாக சந்தை சார்ந்த கொள்கைக் கருவிகளை நோக்கி நகர்ந்து தற்போது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளது.


4/ ந.வி.சட்டத்தில் தரப்பட்டவாறு இ.ம.வங்கியின் குறிக்கோள்களாவன (1) பொருளாதார, விலை உறுதிப்பாடு மற்றும் (II) நிதியியல் முறைமை உறுதிப்பாடு

5/ இ.ம.வங்கியின் வெப்தளத்தில் "இலங்கையில் நாணயக் கொள்கைக் குறிக்கோள்களும் நாணயக் கொள்கை வரைச்சட்டமும்" என்னும் தலைப்பின் கீழ் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

இலங்கையில், நி.ச.ஒ.தே நாணயக் கொள்கைக் கருவியாகப் பயன்படுத்தப்படுவதுடன் தற்போது எல்லா வகையான ரூபாய் வைப்புகளிலும் பிரயோகிக்கத்தக்க விகிதம் 10 சதவீதமாகும். எனினும் தி.ச.தொ. களில் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் நி.ச.ஒ.தே களில் நம்பிக்கை குறைந்துள்ளது. தற்போதைய நி.ச.தொ. முறைமையின் கீழ், விரும்பப்படும் ஒதுக்க பண இலக்குடன் இசைவாக இருப்பதற்காக சந்தையில் ரூபாயின் திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்வதற்குத் திறைசேரி உண்டியல்களின் விற்பனை மற்றும் / அல்லது கொள்வனவில் ஈடுபட்டுள்ள அதேவேளை மீள்கொள்வனவு வீதம் மற்றும் / அல்லது மறுதலையான மீள் கொள்வனவு வீதத்தை மாற்றுவதன் மூலம் நாணயக் கொள்கை நிலைபாட்டை இ.ம.வ குறித்துக் காட்டுகின்றது. கொள்கை வீதங்களை (அதாவது, மீள்கொள்வனவு வீதம் மற்றும் மறுதலையான மீள் கொள்வனவு வீதங்கள்) குறைப்பதன் மூலம் அத்துடன் / அல்லது திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் இ.ம.வ பணநிரம்பலில் விரிவாக்கத்தைத் தூண்டி சந்தை வட்டி வீதங்களில் குறைப்பை ஊக்குவித்து நாணயக் கொள்கை நிலைப்பாட்டை தளர்த்த முடியும். அதேபோன்று இ.ம.வ. அதன் கொள்கை வீதங்களை உயர்த்துவதன் மூலம் மற்றும் / அல்லது அதன் பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களை விற்பதன் மூலம் அல்லது அதன் சொந்தப் பிணையங்களை வழங்குவதன் மூலம் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை இறுகச் செய்ய முடியும். இந்த தி.ச தொழிற்பாட்டு செயற்பாடுகள் அழைப்புப் பணச் சந்தையிலும் (அதாவது வர்த்தக வங்கிகளிடையேயான பணத்தை) வங்கி முறைமையில் கிடைக்கக்கூடியதாயுள்ள ரூபாயின் திரவத்தன்மையிலும் பெரும்பாலும் உடனடியான தாக்கத்தை ஏற்படுத்தி அவற்றின் கடன் நிரம்பல் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும். அழைப்பு வீதங்களின் மாற்றங்கள் மற்றும்/அல்லது ரூபாயின் திரவத்தன்மை கிடைக்கக்கூடியதாக இருத்தல், மிகக் குறுகிய காலத்தில் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு மற்றும் வர்த்தக வங்கிகளின் முதனிலைக் கடன் வழங்கல் வீதங்கள் போன்ற ஏனைய குறுகியகால சந்தை வீதங்களில் மாற்றங்களுக்கு இட்டுச்செல்லும். இம்மாற்றங்கள் காலப்போக்கில் வர்த்தக வங்கிகள் திறைசேரி முறிகளின் விளைவுகள் மற்றும் வங்கி முறைமையின் கடன் விரிவாக்கல் என்பவற்றின் பொதுவான கடன் வழங்கலையும் வைப்பு வீதங்களையும் பாதித்து அதன் மூலம் கடன் பெறுவோர்கள் (நுகர்வுக்காகவும் முதலீட்டுக்காகவும்) மற்றும் சேமிப்பாளர்களின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும். அவை செலாவணி வீதத்திலும் உரிமைப் பங்கு மற்றும் அசைவற்ற சொத்துக்களின் விலைகள் போன்ற சொத்துக்களின் விலைகளிலும் தாக்கத்தைக் கொண்டிருக்கும். இறுதியாக இம்மாற்றங்கள் எல்லாம் கூட்டுக்கேள்வியின் மீதான அவற்றின் தாக்கத்தின் ஊடாக பொதுவிலை மட்டத்திலும் பொருளாதாரத்தின் வெளியீட்டிலும் தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

சுருக்கமாக பணவீக்கம் (அல்லது பணச்சுருக்கம்) பாரதூரமான மோசமான பொருளாதார, சமூக, அரசியல் தாக்கங்களைக் கொண்டுள்ள அதேவேளை, பொருளாதார மொன்றில் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் பல நன்மைகளைக் கொண்டுள்ளது. குறுகிய காலத்தில் விலைகள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் ஏனைய காரணிகள் இருப்பினும் கூட, காலப்போக்கில் பணவீக்கம் இன்றியமையாதவாறு மிகையான பண நிரம்பலால் ஏற்படுகின்றது. இதன் விளைவாக, நாணயக் கொள்கையின் மிகவும் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், அதாவது விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் ஆகும். எனினும், விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு நாணயக் கொள்கை மட்டும் போதாது என்பதையும் ஏனைய பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தனியாக நாணயக் கொள்கையை மேற்கொள்ள முடியாதென்பதையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும். குறிப்பாக, விலை உறுதிப்பாட்டு இலக்கைப் பயனுறுதியுடன் அடைவதற்கு இறைக்கொள்கை (அதாவது, வரிகள், செலவினம் மற்றும் பற்றாக்குறை நிதியிடல் பற்றிய அரசாங்கத்தின் கொள்கைகள்) நாணயக் கொள்கையுடன் இணைந்து செயலாற்றல் வேண்டும். வருமானக் கொள்கைகளும், அதாவது கூலிகளை உற்பத்தி இயல்பு வருமானங்களுடன் தொடர்புபடுத்தும் கூலி அமைப்பு தொடர்பான கொள்கைகளும் ஆராயப்படல் வேண்டும். மேலும், இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் குறைவானதும் உறுதியானதுமான பணவீக்கச் சூழலை, அதாவது விலை உறுதிப்பாட்டுச் சூழலை உருவாக்குவதற்கு தீர்க்கப்படவேண்டிய ஏனைய கட்டமைப்புப் பிரச்சினைகளும் (அதாவது கூடுதலான விரயத்தை ஏற்படுத்தி உற்பத்தி மேம்பாடுகளைக் கட்டுப்படுத்தும் உற்பத்தி, நிலம். முயற்சி மற்றும் மூலதனச் சந்தையின் ஆற்றலின்மை) உள்ளன.

உரு. 1 - நாணயக் கொள்கையின் செலுத்துதல் நுட்பம்




## தொடர்பான முக்கிய சொற்கள்

மையப்பணவீக்கம்: அதிகளவில் மாறக்கூடிய விலை மாற்றங்களுக்கு அமைவாக சில ஆக்கக்கூறுகளை தவிர்ப்பதன் மூலம் பணவீக்கத்தின் கீழான போக்கைப் பிரதிபலிக்கும் ஓர் அளவு.

பணச்சுருக்கம்: பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் இறக்கம்.

குறைப்பணவீக்கம்: விலை அதிகரிப்பு வீதத்தின் வேகம் குறைவடைதல். (பணச்சுருக்கத்திலிருந்து வேறுபட்டது)

பணவீக்கம்: பொதுவிலைமட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு

மிகைப் பணவீக்கம்: பணவீக்கத்தின் துரித அதிகரிப்பு, வழக்கமாகப் பொது விலைமட்டத்தில் 100% அல்லது அதைவிடக் கூடுதலான அதிகரிப்பு.

தேக்கப் பணவீக்கம்: ஒரு பொருளாதாரம் தேக்க நிலையில் இருப்பதோடு (அல்லது மந்தமான வளர்ச்சி) மற்றும் அதிகரிக்கும் பணவீக்கம் ஆகிய இரட்டைப் பிரச்சினைகளை அனுபவிக்கும் சூழ்நிலை

கீழ்பணவீக்கம்: நாட்டின் கூட்டுக்கேள்வி மற்றும் வழங்கலுக்கிடையிலான சமநிலையைப் பிரதிபலிக்கும் பொதுவிலை மட்டத்தின் போக்கு.

மேலதிகத் தகவல் தொடர்புகளுக்கு:
தகவல் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 1
தொ.பே: 2477418, 2477639, 2477420, 2477000
**www.centralbanklanka.org**

வெளியீடுகள் விற்பனைக் கருமபீடம்:
வங்கித் தொழில் ஆய்வு நிலையம்
58, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை
ராஜகிரிய
தொ.பேசி: 2477829, 2477803